வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 12.03.2025 புதன்கிழமை | இதழ் : 72 | பக்கங்கள் : 12




# புதிய தமிழ் அரசுக் கட்சியை உருவாக்க இரகசிய திட்டம்!

## தமிழ் அரசின் 6 எம். பிக்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 12

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியை விட்டு புதிய தமிழ் அரசுக் கட்சியை உருவாக்க தாயகத்திலுள்ள - புலம்பெயர் நாடுகள் மற்றும் இந்தியாவிலுள்ள தமிழ்த் தேசியவாதிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். இதனிடையே, தமிழ் அரசுக் கட்சியின் 6 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் இதற்கு உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

'அரங்கம்' இணையத் தளத்தில் அழகு குணசீலன் என்ற பெயரில் வெளியாகும் 'வெளிச்சம்' என்ற தொடர் கட்டுரையிலேயே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"புதிய தமிழரசு: அப்புக்காத்து அரசியலுக்கு முடிவு கட்டுமா?" - (வெளிச்சம் 046) என்ற தலைப்பில் வெளியான அந்தக் கட்டுரையில்,

"தமிழ் அரசின் சமகால தலைமைகளால் அந்தக் கட்சி தப்பிப்பிழைக்க வாய்ப்பில்லை என்று உறுதியாக நம்பும் நிலையிலேயே புதிய தமிழ் அரசு ஒன்றை உருவாக்குவது குறித்து இலங்கை, இந்திய, புலம்பெயர்ந்த நாடுகளின் தீவிர தமிழ்த்தேசிய பக்தர்கள் இரவுபகலாக ஆலோசித்து வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

"மருத்துவர் சத்தியலிங்கத்தின் தேசிய பட்டியல் நியமனம், சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் சுதந்திரக்-கட்சியின் ஆதரவாளராக இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் **11**



# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பிறேம்சங்கர்!

## ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்

கொழும்பு, மார்ச் 12

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக அன்னலிங்கம் பிறேம்சங்கர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியான அ. பிறேம்சங்கர் முன்னதாக யாழ்ப்பாணம், **11**

# தமிழ் அரசுக் கட்சி யாழில் கட்டுப்பணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்று செவ்வாய்க்கிழமை கட்டுப்பணம் செலுத்தியது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள ஒரு மாநகர சபை மற்றும் 16 பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்காகவே தமிழ் அரசுக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. யாழ். மாவட்ட தேர்தல் பணிமனையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் கட்டுப்பணத்தை செலுத்தினார். (ஐ)

# புலமைப்பரிசில் மீள்மதிப்பீடு வெளியானது!

கொழும்பு, மார்ச் 12

2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையின் மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் வெளியிடப் பட்டுள்ளன.

www.doenets.lk அல்லது **11**

# தையிட்டி விகாரை விவகாரம் நேரில் ஆராய்ந்து நியாய முடிவு

## புத்த சாசன அமைச்சர் உறுதி

கொழும்பு, மார்ச் 12

தையிட்டி விகாரை தொடர்பில் நேரில் ஆராய்ந்து இது விடயத்தில் நியாயமான முறையில் முடிவு எட்டப்படும் என்று புத்த சாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

10ஆவது பாராளுமன்றத்தின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனை குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சர் தலைமையில் கூடிய போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் "இனங்களுக்கிடையில் சுமுகத்தன்மையை உறுதிப்படுத்த அரசாங்கம் உரிய தலையீட்டை மேற்கொள்ளும். யாழ்ப்பாணம் வலி. வடக்கு பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள விகாரைக்குச் சென்று அதனைப் பார்வையிடவுள்ளேன். அதன் **11**

# தேர்தலுக்கு பின்னரே மேயர் யார் என்று அறிவிக்கப்படும்!

## தமிழ் அரசின் பதில் பொது செயலர்

யாழ்ப்பாணம், மார்ச் 12

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மாநகர முதல்வர், நகர பிதா, மற்றும் தவிசாளர் யார் என் பதை முன்னரே அறிவிப்பதில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. இதனால், அந்தப் பதவிகளுக்கு உரியவர்களின் பெயர் தேர்தலுக்கு பின்னரே அறிவிக்கப்படும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். **11**

# மன்னார் காற்றாலை மின்திட்டம் மீள ஆரம்பிக்க அதானி விருப்பம்!

கொழும்பு, மார்ச் 12

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் முன்னர் வழங்கப்பட்ட ஒப்புதல்களின்படி செயல்படத் தயாராக இருப்பதாக அதானி கிறீன் எனர்ஜி இலங்கை லிமிட்டெட் எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சிடம் தெரிவித்துள்ளது.

இரண்டு வருட நீண்ட பேச்சுகளை தொடர்ந்து மன்னார் காற்றாலை திட்டத்திலிருந்து **11**

தெல்லிப்பழை மருத்துவமனையில்

# பெண் மனநோயாளி வன்புணர்வு; மருத்துவமனை பணியாளர் கைது!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், மார்ச் 12

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மனநல சிகிச்சை பிரிவில் பெண் நோயாளி ஒருவரை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் மருத்துவமனையின் துப்புரவு **11**

மட்டக்களப்பு பாடசாலையில்

# உணவு ஒவ்வாமையால் 54 மாணவர்கள் பாதிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 12

உணவு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 54 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - கரடியனாறு பகுதியின் பாடசாலை ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட்ட உணவை உட்கொண்ட மாணவர்களே ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. **11**



அமரபுர மகாநாயக்க தேரருக்கு சிறீ சன்னஸ் பத்திரத்தை ஜனாதிபதி அநுரகுமார வழங்கி வைத்தபோது...!

# கடமை முடிந்து விடுதி திரும்பிய பெண் மருத்துவர் வன்புணர்வு!

## சந்தேகநபர் முன்னாள் சிப்பாய்

கொழும்பு, மார்ச் 12

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் தனது கடமைகளை முடித்துவிட்டு மருத்துவமனை வளாகத்திலுள்ள தனது விடுதிக்கு திரும்பிய பெண் மருத்துவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மருத்துவமனை வளாகத்துக்குள் புகுந்த நபர் கத்தி முனையில் மருத்துவரை மிரட்டி அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தை கண்டித்தும் - குற்றவாளியை **11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சேமிப்பு பழக்கமே பொருளாதாரத்தை வளர்க்கும்!

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்


யாழ்ப்பாணம், மார்ச் 12

“இன்று புலம்பெயர் மக்களிடம் கையேந்தி நிற்கும் போக்குப் பெருகி வருகின்றது. அதிலும் இடையிலே புகுந்த யூ-ரியூப்பர்களின் செல்வாக்கால் குடும்பப் பெண்கள் தமது வறுமையை வெளிப்படுத்தி கையேந்தி நிற்கின்றனர். இந்த நிலை எங்களின் முன்னோரிடையே இருந்ததில்லை. பெண்களிடம் சேமிப்புப் பழக்கத்தை கட்டி வளர்ப்பதன் மூலம் குடும்பப் பொருளாதாரத்தையும் தேசத்தின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் சந்திர மௌலீசன் லலீசன் - கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள வானவில் ஆடைத் தொழிற்சாலை முன் னெடுத்த மகளில் தினவிழாவில் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாடு பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் அதனை நிமிர்த்துவதில் ஆடைத்தொழிற் துறையில் பணியாற்றும் பெண்கள் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றனர். நெடுநேரம் நின்ற நிலையில் தமது கடின உழைப்பை வழங்குகின்றனர். இலங்கையின் பொருளாதாரத்தில் பங்களிக்கும் பெருந்தோட்டத்துறை மற்றும் ஆடை உற்பத்தித் துறை சார்ந்த பெண்கள் கீழ் நிலை உழைப்பாளிகளாகவே உள்ளனர். உயர்மட்ட முகாமைக்குழுவில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இத்தொழில் துறை சார்ந்த உயர்பதவி நிலைகளில் பெண்கள் அமர்கின்ற போது பெண்கள் சார்ந்த உணர்வுகளை அவர்கள் அதிகமாகப் புரிந்து கொள்வர்.

இன்று எமது சமூகத்தில் வீண் செலவு செய்வோரை காண முடிகிறது. இத்தகைய வீண் செலவுகளுக்கான பணத்தை புலம்பெயர் தமிழர்களிடம் எதிர்பார்க்கும் போக்கும் அதிகரித்து வருகின்றது. முன்னைய காலங்களில் குடும்பப் பெண்கள் உண்டியல்களிலும் பால்மா பேணிகளிலும் பணத்தை சிறுகச் சிறுகச் சேமித்தார்கள். ஆண்கள் தமது சம்பளத்தைப் பெண்களிடம் வழங்கினார்கள். பெண்களே குடும்பப் பொருளாதாரத்தை முகாமை செய்தார்கள். தொழில் துறை சார்ந்த பெண்கள் சிக்கன வாழ்க்கை பற்றி கரிசனை கொள்ள வேண்டும். ஆடம்பரமான செலவுகளை தவிர்க்க வேண்டும். எங்கள் உழைப்பில் நாங்கள் வாழ்வதுவே மானம் - என்றும் கூறினார். (ஐ)



# யாழ்ப்பாணம் நகரில் நேற்று கையெழுத்துப் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

மருந்துகள், அத்தியாவசிய பொருட்கள்மீதான வற் வரியை நீக்க கோரியும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது.

மக்கள் பேரவை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதில் மக்கள் பேரவை இயக்கத்தின் உறுப்பினர்களான வசந்த முதலிகே, ராஜ்குமார் ரஜீவ்காந், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மதுசன், பௌத்த தேரர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர்கள், மக்கள் பேரவை இயக்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-05)

# யாழ். மாவட்ட செயலகத்தில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 12

இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நடமாடும் சேவை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி. ப 3.00 மணிவரை அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, தேவையானவர்கள் உரிய ஆவணங்களுடன் வந்து பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ஐ-05)

# வசதி படைத்தவர்களும் அஸ்வெசும திட்டத்தில்!

## வடக்கு ஆளுநர் அதிருப்தி

யாழ்ப்பாணம், மார்ச் 12

வசதி படைத்தவர்களும் அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று அதிருப்தி தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன்.

அஸ்வெசும திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் மக்கள் பல பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். வறுமை நிலையி லுள்ள பலர் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. அதே நேரம் வசதி வாய்ப்புள்ள சிலரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் தினமும் முறையிடுகின்றனர். இந்தப் பிரச்னைகளை விரைவாகத் தீர்க்க வேண்டும் - என்று வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்ட செயலாளர்களையும் இதன்போது வலியுறுத்தினார். (ஐ)

# பூங்காவன திருவிழாவில் கலைநிகழ்ச்சிகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஆனைக்கோட்டை - சாவல்கட்டு பெரியதம்பிரான் ஆலய மாசி மகப் பெருவிழா கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்தப் பெருந்திருவிழாவில் நாளை வியாழக்கிழமை பூங்காவன திருவிழா நடைபெறவுள்ளது.

பூங்காவனத் திருவிழா நிறைவடைந்ததும் இரவு 8 மணிக்கு மதுரகவி காரை. எம். பி. அருளானந்தனின் நெறியாள்கையில் சைவதமிழ் கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து, பொலிகண்டி கலையக நடனத் துறை ஆசிரியை கலைவாணியின் நெறியாள் கையில் “பண் ஆடும் பரதம்” 14 கலைக்குரு மாணவர்கள் வழங்கும் நிகழ்ச்சியும் அரங்கேறவுள்ளது. (ஐ)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12

சட்டத்தரணி இ. செல்வஸ்கந்தன் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மகாஜன கல்லூரியில் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆர். புஷ்பரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறை பேராசிரியர் கணேசலிங்கம் சசிகேஷ், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் எம். மணிசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# இலங்கை தமிழ் அரசுக் கட்சி முல்லைத்தீவில் கட்டுப்பணம்

முல்லைத்தீவு, மார்ச் 12

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்று செவ்வாய்க்கிழமை செலுத்தியது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய 4 பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்காக தமிழ் அரசுக் கட்சி கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாட்டவ செயலாளருமான து. ரவிகரன் கட்டுப்பணத்தை மாவட்ட தேர்தல் பணிமனையில் நேற்று செலுத்தினார். (ஐ)

# நல்லை ஆதீனத்தில் திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் திருவள்ளுவர் விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ் சிறப்புக்கலை மாணவன் யோ. நிவேதன் வரவேற்புரை ஆற்றுவார். யாழ். பல்கலைக்கழக நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் கி. அருட்செல்வியின் நெறியாள்கையில் திருக்குறள் நடனம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர் கல்லூரி தமிழாசிரியர் ந. குகபரனின் திருக்குறளில் பண்புற மொழிதல் என்ற தலைப்பில் அமைந்த சிறப்புரை, பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தைக் கற்கும் மாணவரிடையேயான திருக்குறள் வினாடி வினா போட்டியின் இறுதிப்போட்டி, வலம்புரி பத்திரிகை ஆசிரியர் ந. விஜயசுந்தரம் தலைமையில் தெ. ஹர்சன், ர. தர்மினி, ஜீவா சஜீவன், இ. கார்த்தியாயினி, த. கருணாகரன், செல்வதிஅம்மா ஆகியோர் பங்குபற்றும் “இன்றைய தமிழர் செல்நெறி வள்ளுவர் வகுத்த பாதையில் பயணிக்கின்றதா“ என்ற பொருளில் அமைந்த பட்டிமண்டபம் என்பன நடைபெறவுள்ளன. தமிழ்ச் சங்கப் பொருளாளர் மருத்துவ சேவை உத்தியோகத்தர் லோ. துஷிகரன் நன்றியுரை ஆற்றுவார்.

நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பாடசாலைகளுக்கு முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் உரைவகுத்த திருக்குறள் உரை நூல் இலவசமாக வழங்கப்படவுள்ளது. (ஐ)

# டான் கல்வி ரீ. வியின் அனுசரணையில் பூநகரியில் மாணவர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12

டான் கல்வி தொலைக்காட்சியின் னுசணையில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான தமிழ் மொழிப்பாட செயலமர்வு நேற்று பூநகரியில் நடைபெற்றது.

“பரீட்சையை மகிழ்ச்சிகரமாக எதிர்கொள்வோம்“, என்ற தொனிப்பொருளில், டான் கல்வித் தொலைக்காட்சியின் அனுசணையில் வெண்கரம் அமைப்பு இந்த செயலமர்வை நடத்தியது.

வலைப்பாடு ஜெசமீட்பர் சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் பூநகரியின் கிராஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வேரவில் இந்து மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டலும் செயலமர்வும் வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபர் த. பிரபாகரன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் வெண்கரம் அமைப்பின் பிரதான செயல்பாட்டாளர் மு. கோமகன், வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலய பங்குத் தந்தை இரேனியஸ், வலைப்பாடு றோ. க. த. க. பாடசாலை உப அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெண்கரம் அமைப்பின் செயல்பாட்டாளர்களான வட மாகாண முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சு. சண்முகேந்திரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.03.2025 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி

உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வீழ்ச்சியை சந்திக்கும் என்று எதிரணியினர் கூறுகின்றனர். எதிரணிகள் அவ்வாறு தான் கூறும். ஆனால், தற்போதுள்ள அரசியல் சூழலில் தேசிய மக்கள் சக்தி பெரியளவில் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. கிடைக்கும் தகவல்களின்படி வடக்கு, கிழக்கில்கூட தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக நிற்பதில் தமிழர் களும் அதிக ஆர்வம் காண்பிக்கின்றனர் என்று தெரிகிறது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் பெரியளவில் பின்னடைவுகளை சந்திக்கும் என்று கூற முடியாது. ஒருவேளை எதிர்பார்ப்பது போலல்லாமல் சிறிய வீழ்ச்சியை சந்திக்கலாம்.

தேசிய மக்கள் சக்தி அலையொன்று இந்தளவுக்கு எழுச்சியடையும் என்று எவரும் கணித்திருக்கவில்லை - ஜே. வி. பியும்கூட கணித்திருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் வெற்றிபெற முடியாத ஜனாதிபதியாகவே அநுர குமார வெற்றி பெற்றிருந்தார். இந்தப் பின்புலத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெறும் நிலையில் தேசிய மக்கள் சக்தி இருக்காது என்றே பரவலாக நோக்கப்பட்டது. ஆனால், நடந்ததோ வேறு. ஜனாதிபதித் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து அதனை விடவும் அதிகளவில் சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தியை நோக்கித் திரும்பினர்.

இவ்வாறானதொரு பின்னணியில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்தியை மேலும் வலுவான நிலைக்குக் கொண்டு செல்லுமா? அல்லது அவர்களுக்கான வீழ்ச்சியை எதிர்வு கூறும் வகையில் அமையுமா? ஒருவேளை தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் மீண்டும் ஓர் அலையை நிரூபிக்குமாக இருந்தால் இலங்கையின் வரலாற்றில் தொடமுடியாத நிலையை நோக்கி உயரும். அவ்வாறான நிலைமை தேசிய மக்கள் சக்திக்கு தலைமை தாங்கும் ஜே. வி. பியை மேலும் வலுப்படுத்தும். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஜே. வி. பியின் அரசியல் திட்டங்களை முன்னெடுப்பதற்கான உந்துசக்தியாக மாறும்.

பலவீனமான எதிரணியே தேசிய மக்கள் சக்தியின் பிரதான பலமாக இருக்கிறது. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்று சொல்வதுண்டு. ஏனெனில், அவ்வாறான நிலையில்தான் வியாபாரத்தில் சமநிலை ஏற்படும். அவ்வாறில்லாதபோது, வியாபாரத்தில் மேலாதிக்கமே ஏற்படும் - அரசியலும் அப்படித்தான். எதிரணி மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறபோது சவாலற்ற வகையில் ஆளும் தரப்பு மேலும் தன்னை பலப்படுத்திக் கொள்ளும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போதைய நிலையில் பலமான நிலையில்தான் இருக்கிறது. ஆனால், ஆளும் தரப்பின் பலம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல. புதிய அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது, அதுவரையில் தோளில் சுமந்த மக்கள் திடீரென்று கீழே போட்டு விடுவார்கள். ராஜபக்ஷக்களின் எழுச்சிக்கு இதுதான் நடந்தது. நல்லாட்சி அரசாங்கத்துக்கும் இதுதான் நடந்தது.

இதன் தொடர்ச்சியாக தேசிய மக்கள் சக்திக்கும் அது நடக்கலாம். ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அதற்கான அலையை மீளவும் நிரூபிக்குமாயின், எதிரணியால் தொட முடியாத நிலையை அவர்கள் அடைவார்கள். உள்ளூராட்சி கட்டமைப்புகள் ஒரு கட்சியின் அடிக்கட்டுமானமாகும். அரசியலில் ஏனைய எந்தவொரு கட்டமைப்புகளை விடவும் அடிக்கட்டுமானங்கள்தான் அதிகம் உறுதியானதும் - பெறுமதியானதுமாகும். உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி அல்லது வீழ்ச்சி இலங்கையின் அடுத்த கட்ட அரசியலுக்கான அத்திபாரமாகும் என்பதில் ஐயமில்லை.

# யாழ்ப்பாணத்தில் கனமழை; இரு குடும்பங்கள் பாதிப்பு!



*யாழ்ப்பாணம், மார்ச் 12*

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு நாட்களாக பெய்து வரும் மழையால் இரு குடும்பங்களை சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என்.சூரிய ராஜா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் - ஜே/409 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும் பத்தை சேர்ந்த மூன்று பேரும் ஜே/400 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இரண்டு பேரும் இவ்வாறு பாதிக்கப்பட் டுள்ளனர். மேலும், ஒரு வீடு பகுதியளவிலும், ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ- 05)

# அதிகாரமளித்த முகவர்களை நியமிப்பது குறித்து அறிவித்தல்

*கொழும்பு, மார்ச் 12*

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமித்தல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனங்கள் வெளியிடப்பட்ட 336 உள்ளூர் அதிகார சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமிக்கும் கடிதங்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னர் அந்தந்த உள்ளூர் அதிகார சபை தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களால் கட்டுப் பணம் பணம் செலுத்தப்படும் போது வேட்பாளர்களில் ஒருவரை அக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக நியமிக்க முடியும்.

மேலும், நாளை வியாழக்கிழமை அரசாங்க விடுமுறை தினமாக (பௌர்ணமி தினம்) இருந்தாலும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகமும் அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களும் திறந்திருக்கும் - என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ஐ)

# கெஹலியவின் முடக்கப்பட்ட வங்கி கணக்குகள் குறித்து 17இல் தீர்மானம்!

*கொழும்பு, மார்ச் 12*

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை நீக்குவதா இல்லையா என்பது குறித்த தீர்மானம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் சார்பாக முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த பின்னர் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே இந்த உத்தரவை பிறப்பித்தார்.


வழக்கு விசாரணையின் போது, ரம்புக்வெலவின் சட்டப் பிரதிநிதி, "அறகலய" போராட்டத்தின் போது தனது வீட்டை எரித்த சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் பெற்ற 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு மற்றும் ஓய்வூதியம் என்பன அவரது பாராளுமன்ற வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அந்த வங்கிக் கணக்கு தற்போது நீதிமன்ற உத்தரவால் முடக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்குக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குமாறு கெஹலிய ரம்புக்வெலவின் வழக்கறிஞர் நீதிமன்றத்தைக் கோரினார்.

அதன்படி, இந்த விவகாரம் தொடர்பான தீர்மானம் மார்ச் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிபதி உத்தரவிட்டார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
அரசால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மனஇறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவை.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**துலாம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**விருச்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். யோகம் கிட்டும்.

**மீனம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

### யாழில் ரூ. 20 ஆயிரம் இலஞ்சம் பெற்ற

# பொலிஸ் அதிகாரியின் மகனை கைது செய்ய நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச்.12

யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி, தண்டனை இடமாற்றத்தில் சென்ற பொலிஸ் அதிகாரியின் மகனை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பொலிஸ் அதிகாரியின் மகன் வழக்கு ஒன்றை இல்லாது செய்வதற்காக 20 ஆயிரம் ரூபாயை பொதுமகன் ஒருவரிடம் இலஞ்சமாக பெற்றார். இந்த நிலையில், இது குறித்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் பாதிக்கப்பட்ட நபர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்தவகையில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த நிலையில், குறித்த வழக்கானது நேற்று முன்தினம் பொலிஸாரால் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அந்தவகையில் இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் குறித்த சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் (01. 04. 2025) திகதிக்குள் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-05)


# 2 வாகனங்கள் முகமாலையில் விபத்து

முகமாலை, மார்ச்.12

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற இரண்டு மகேந்திரா ரக வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

முகமாலை பகுதியில் ஏ - 9 வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

முன்னால் பயணித்த வாகனம் சமிக்ஞையின்றி மாற்று வீதிக்குத் திரும்ப முற்பட்ட வேளை பின்னால் வந்த இன்னொரு மகேந்திரா வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.




இந்தச் சம்பவத்தில் வாகனம் பலத்த சேதங்களுக்கு உள்ளான போதும் சாரதிகளுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பளை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

### இளம் பெண் அவமதிப்பு

# யாழில் யூரியூப்பர் உட்பட நால்வர் 14 நாட்களுக்கு விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச்.12

யாழில் இளம் பெண் ஒருவரை அவமானப்படுத்தும் விதமாக நடந்து கொண்ட யூரியூப்பர் உட்பட நால்வரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த யூரியூப்பர் உதவி செய்யும் காணொலிகளை தனது சனலில் பதிவேற்றி வந்தார். அவர் ஒரு வீட்டுக்குச் சென்று அநாகரிகமாக நடந்துகொண்ட காணொலி ஒன்று வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

இவ்வாறான பின்னணியில் அவர் உட்பட நால்வர் கடந்த 09 ஆம் திகதி அந்த வீட்டுக்கு மீண்டும் சென்றவேளை ஊர் இளைஞர்கள் அவர்களை மடக்கிப் பிடித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அவர்களுக்கு எதிராக பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில் அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

(எ-05)

# "அயனைச் சிறைபுரி படலம்" சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச்.12

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் - 16 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் க. கயிலைவாசன் "அயனைச் சிறைபுரி படலம்" என்னும் விடயப்பொருளில் ஆற்றுவர். இதேவேளை, சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

# "தேர்தல் போட்டியில் சமநிலை அவசியம்"

யாழ்ப்பாணம், மார்ச்.12

ஒரு நாட்டில் அமைகின்ற அரசுகளே மக்களின் வாழ்க்கை முறையை தீர்மானிக்கின்றன. அனால், அந்த அரசையும் அரசியலையும் தீர்மானிப்பது மக்களாக இருக்கின்றனர் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் விக்ரர் தெரிவித்தார்.

தமக்கான அந்த அதியுயர் சக்தியை மக்கள் சரியாகப் பயன்படுத்தி வெற்றி கொள்வது மிக அரிதாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

தேர்தல் செலவீனங்களை முன்னிறுத்திய தேர்தல் பிரசாரங்கள், அதன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனங்கள் தொடர்பில் கண்காணிக்கும் மாவட்ட மட்ட தேர்தலுடன் தொடர்புடையவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் சர்வோதயம் மண்டபத்தில் நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 6000 படையினர் நடத்தும் முன்பள்ளிகளில் ரூ. 30000!

## சபையில் சுட்டிக்காட்டினார் கஜேந்திரகுமார்

கொழும்பு, மார்ச் 12

**வடக்கில் படையினரால் நடத்தப்படும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான சம்பளம் வழங்கப்படுகின்ற போதும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகின்றது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் குறைந்தது பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்படுவதற்கு சமாந்தரமான சம்பளத்தை வழங்கவேண்டும். இல்லையென்றால் இராணுவ மயமாக்கலாகவே இதனைக் கருத வேண்டி வரும். வடக்கு மாகாணத்தில் மாத்திரம் ஏன் இந்த நிலைமை. இதை மாற்ற வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-கல்வியாளர்கள் மீது எனக்கு சிறந்த மரியாதை உள்ளது. இங்குள்ள ஆசிரியர்களின் எதிர்பார்ப்பது தமக்கு கீழுள்ள மாணவர்கள் சமூகத்தில் மிளிரவேண்டும் என்பதாகவே இருக்கின்றது. கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் அதிகமாக நிதி ஒதுக்கீட்டை செய்ய வேண்டிய துறையாக இது இருக்கின்றது. மாணவர்களுக்கு உயரிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

ஆசிரிய சேவையின் சம்பளம் குறைவானதாகவே இருக்கின்றது. சம்பள அதிகரிப்புக்காக அதிபர், ஆசிரியர்கள் முன்னெடுத்த போராட்டத்தின் பின்னர் சுபோதினி குழுவின் அறிக்கைக்கு அமைய மூன்று கட்டங்களாக சம்பள அதிகரிப்பை நடைமுறைப் படுத்த உறுதியளிக்கப் பட்ட போதும் அது தொடர்பில் நடவடிக்கைகள் இல்லாமல் இருக்கின்றது. எவ்வாறாயினும் பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றுக்கு அதிகளவில் ஒதுக்காது அவற்றை கல்விக்காக ஒதுக்கலாம்.

தேவேளை, முன்பள்ளி ஆசிரியர்கள் விடயத்தில் படையினரால் நடத்தப்பப டுபவற்றில் 30 ஆயிரம் ரூபாவுக் கும் அதிகமான சம்பளம் வழங்கப்படுகின்ற போதும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகின்றது.இதனால் முன்பள்ளி ஆசிரி யர்களுக்கும் குறைந்தது பாது காப்புப் படையினருக்கு வழங் கப்படுவதற்கு சமாந்தரமான சம்பளத்தை வழங்க வேண்டும். இல்லையென்றால் இராணுவ மயமாக்கலாகவே கருத வேண்டி வரும். இது ஏன் வடக்கு மாகாணத்தில் மாத் திரம் நடக்கின்றது. இதனை மாற்றவேண்டும்-என்றார். (அ)

# நீதிமன்ற துப்பாக்கிச்சூடு இதுவரை 10 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 12

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் இதுவரை 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மித்தெனியவில் தந்தை மற்றும் இரு குழந்தைகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் இம்மாதம் ஐந்தாம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய ஐவரும் நீதிமன்ற அனுமதியுடன் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், புதுக்கடை நீதிமன் றத்தில் நடத்தப்பட்ட துப்பாக் கிப் பிரயோக சம்பவம் தொடர் பில் 10 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர். -என்றார்.

# மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 12

மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சஞ்சய சிறிவர்தன கைது செய்யப்பட்டுள்ளார். அத்தனகல்லவில் உள்ள முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்குச் சொந்தமான காணியில் இருந்து ரி-56 துப்பாக்கி, இரண்டு மகசின்கள், 130 தோட்டாக்கள், 12 போர் துப்பாக்கி மற்றும் ஆறு தோட்டாக்களை பொலிஸார் கண்டுபிடித்ததை அடுத்து இந்த கைது இடம்பெற்றுள் ளது.

அந்தப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்களை கண்டுபிடிக்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மேல் மாகாண (வடக்கு) குற்றப் பிரிவுப் பணிப்பாளர் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (அ)

# வகுப்பில் மாணவிகளுடன் சேர்ந்து மாணவர்களைத் தாக்கிய ஆசிரியர்!

கொழும்பு, மார்ச் 12

நுகேகொடை மற்றும் கம்பஹா பகுதிகளில் தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் ஒருவர், தனது வகுப்புகளுக்கு வரும் மாணவர்களை, மண்டியிட கட்டாயப்படுத்தி, அதே வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுடன் சேர்ந்து தாக்கும் காணொளி தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

இந்த ஆசிரியர் தனது வகுப்புகளில் மாணவர்களை பகிரங்கமாக துஷ்பிரயோகம் செய்கிறார்.

தற்போதைய அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ள தலைவர்களுடன் தனக்கு தொடர்புகள் இருப்பதாகக் கூறும் புகைப்படங்களை தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்ட இந்த நபர், அரசியல் ரீதியாக அவதூறு பரப்புவதன் மூலம் தனது பயிற்சி வகுப்புகளில் நேரத்தை வீணடிப்பதாகக் கூறப்படுகிறது.

இளம் மாணவர்களின் கண்ணியத்துக்கு களங்கம் விளைவிக்கும் இத்தகைய ஆசிரியர்கள் மீது உடனடியாக சட்டம் அமுல்படுத்தப் பட வேண்டும் என்று வலியுறுத்தும் சமூக ஆர்வலர்கள், இது போன்ற பைத்தியக்காரத்தனமான நடத்தையை வெளிப் படுத்தும் ஆசிரியர்கள் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் இதுபோன்ற குழந்தைத்தனமான செயல்களில் ஈடுபடுவதாகக் கூறுகின்றனர்.

# தேர்தல் காலத்தில் பொலிஸ் இடமாற்றம் சட்டவிரோதம்!

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு.

கொழும்பு, மார்ச் 12

தேர்தல் காலத்தில் பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்வது சட்டவிரோதமானது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 41 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

தேர்தல் காலத்திலேயே பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அரச சேவையாளர்கள் தேர்தல் காலத்தில் இடமாற்றம் செய்யப்படுவது தடை செய்யப் பட்டுள்ளது. அவசியமானால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெற்று இடமாற்றம் செய்யவேண்டும்.

இந்த நடவடிக்கை ஊடாக தேர்தல் பெறுபேறுகளில் அரசாங்கத்தினால் ஆதிக்கம் செலுத்துவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

அவ்வாறெனில் தேர்தல் காலத்தில் பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி இடமாற்றம் செய்யப்படுவார் களாயின் இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

# மினுவாங்கொடை துப்பாக்கிச்சூடு உதவியாளர்கள் இருவர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 12

கம்பஹா, மினுவாங்கொடை, பத்தன்டுவன பிரதேசத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாக கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பத்தன்டுவன பிரதேசத்துக்கு கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் ஓட்டோவில் இருந்த நபரொருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல் காரருமான “கெஹெல்பத்தர பத்மே”என்று அழைக்கப்படும் மன்தினு பத்மசிறி பெரேரா ஹேவத் என்பவரின் உதவியா ளர் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் ஜா - எல மற்றும் ஏக்கல ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

20 மற்றும் 21 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.சந்தேக நபர்களிடமிருந்து ஓட்டோ மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணை களுக்காக கம்பஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு நேற்று திறந்த பிடியாணை!

கொழும்பு, மார்ச் 12

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை உடனடியாகக் கைது செய்வதற்கான திறந்த பிடியாணையை மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளின் பேரில் நேற்று இந்த திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு வெலிகமாவில் உள்ள ஒரு முக்கிய ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இடைநீக்கம் செய்யப் பட்ட பெலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தேடப்பட்டு வருகிறார்.

முன்னதாக தென்னக்கோன் தன்னைக் கைது செய்வதற்கான மாத்தறை நீதிவான் உத்தரவை இடைக்காலமாக நிறுத்தி வைக்கக் கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்தார்.

தென்னக்கோன் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தும் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்து வந்தால், அவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்ய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொது பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல எச்சரித்திருந்தார்.

தேசபந்து தென்னக்கோன் தொடர்பான ஏதேனும் தகவல்களை வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு பிள்ளைகளை போல் வடக்கு-கிழக்கு பிள்ளைகளுக்கும் தரமான கல்வி வேண்டும்!

## துரைராசா ரவிகரன் சபையில் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 12

கல்விக்கான முதலீடு செலவல்ல, அது எதிர்காலத்திற்கான முதலீடு கல்விக்கான ஒதுக்கீடுகளை சமத்துவ அடிப்படையில் மேற்கொண்டு தெற்கின் பிள்ளைகளைப் போல வடக்கு-கிழக்கின் பிள்ளைகளும் தரமான, சமத்துவமான, சிறப்பான கல்வியை பெறுவதை இவ்வாண்டிலிருந்தே உறுதிப்படுத்துமாறும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின்மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு வலியுறுத் தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-போதுமானதற்ற கட்டடங்கள், கட்டிமுடிக்கப்படாத வகுப்பறைக் கட்டடங்கள், நூலகங்கள், ஆய்வுகூடங்கள் இன்றி வன்னிப் பிராந்தியப் பாடசாலைகள் இன்னமும் இருப்பதை தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். வன்னியில் வாழும் எங்கள் பிள்ளைகள், போதுமான ஆசிரியர்கள் இன்றி, இணைய வசதி இன்றி, முறையான வழிகாட்டல்கள் இன்றி பாடசாலை மட்டத்திலே மிகவும் இடர்படுகின்றார்கள்.

வன்னி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களில் முதன்மையானவை ஊழியர் பற்றாக்குறை. வன்னி மாவட்டத்தில் உள்ள 6 கல்வி வலயங்களில் குறிப்பாக முல் லைத்தீவு கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம், அழகியல் பாடங்கள், விசேட கல்வி, உயர்தர பௌதிகவியல், இணைந்த கணிதம், வணிகக் கல்விபாடங்களுக்கு ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுகிறது.1ஏபி பாடசாலை தொடக்கம் வகை 2 பாடசாலை வரை உரிய பாட ஆசிரியர்கள் இன்மையால் நீங்கள் முன்மொழியும் தரமான கல்வியை எங்கள் மாணவர்கள் பெற இயலாதுள்ளனர். தரமான கல்வியைக்கொள்கையை எங்கள் வன்னியிலும் உறுதிப்படுத்துவீர்களா?

பல பாடசாலைகள் போதுமான அளவில் கல்வி சார், கல்விசாரா ஊழியர்கள் இல்லை. முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மாத்திரம் 392 ஆளணி வெற்றிடங்கள். இவர்களில் 322 ஆசிரியர்கள். அதிபர் சேவைக்குரியோர் 23, காவலாளிகள் 20 பேர், பாடசாலைப் பணியாளர்கள் 12. விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழினுட்பம் உட்பட பத்து துறைகளுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் இல்லை. 14 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லை. வவுனியா தெற்கு வலயத்தில் 29 காவலாளிகள், 10 பாடசாலை பணியாளர்கள் உள்ளிட்ட ஆளணி வெற்றிடங்கள் உள்ளன. ஏனைய கல்வி வலயங்களிலும் இத்தேவைப்பாடுகள் உண்டு. பட்டதாரிகளை உள்ளீர்ப்பு செய்யும் வகையில் பாடசாலைகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நிரந்தரத்தீர்வு என்ன? - என்றார். (அ)

# பாழடைந்த கிணற்றிலிருந்து மூன்று துப்பாக்கிகள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 12

பாழடைந்த கிணற்றிலிருந்து இரு வெளிநாட்டுத் துப்பாக்கிகள் உள்ளடங்கலாக மூன்று கைத்துப்பாக்கிகளை நேற்று பொலிஸார் மீட்டனர்.

கொழும்பு - கடுவலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிவிட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனையிலேயே இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான இடமொன்றில் உள்ள சுமார் 45 அடி ஆழமான கிணற்றில் பொலித்தீன் பை ஒன்றுக்குள் வைக்கப்பட்டு இந்தத் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

ரிவால்வர், மற்றும் பிஸ்டல் ரக துப்பாக்கிகளே கைப்பற்றப்பட்டன. அத்துடன், அந்தத் துப்பாக்கிகளுக்கான 153 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யானைகள் ரயிலில் மோதுவதை தடுக்க புதிய கருவி கண்டுபிடிப்பு

## 10 ஆம் தர மாணவன் சாதனை

கொழும்பு, மார்ச் 12

காட்டு யானைகள் ரயில்களில் மோதி விபத்துக்குள்ளாவதைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய கருவியை மாணவர் ஒருவர் தயாரித்துள்ளார்.

தொலங்கமுவ சேனாநாயக்க வித்தியாலயத்தின் 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் சுமீர ரன்தரு எனும் மாணவரே இந்த கருவியைத் தயாரித்துள்ளார்.

அந்த மாணவரின் புதிய தயாரிப்பு தொடர்பில் அவர் நேற்று முன் தினம் ரயில்வே பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளார்.

காட்டு யானைகள் ரயிலில் மோதுவதால் காட்டு யானைகளின் எண்ணிக்கையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும் கூட இந்த விபத்துகளைத் தடுக்க பல்வேறு உத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ஆனால் அவை இன்னும் முறையாக நடைமுறைக்குக் கொண்டு வருவதாகத் தெரியவில்லை.

சுமீர ரன்தரு என்ற மாணவர் தயாரித்துள்ள புதிய கருவி, ரயில் மார்க்கத்தில் காட்டு யானைகள் இருந்தால் அந்த கருவியைத் தானாகவே செயற்படுத்தி ரயில் ஓட்டு நருக்குக் குறுஞ்செய்திமூலம் அறிவிக்கும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

இந்த கருவியின் செயற்பாட்டு நிலைமை தொடர்பில் பரிசீலித்துப் பார்ப்பதற்காகச் சந்தர்ப்பம் வழங்குமாறு ரயில்வே பொது முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த கருவியின் வெற்றியைப் பொறுத்து நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்க முடியும் என்று ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

# அரச சேவையில் 5,882 வெற்றிடம் நிரப்ப அனுமதி

கொழும்பு, மார்ச் 12

அரசு சேவைகளில் 5,882 வெற்றிடங்களை நிரப்ப அமைச் சரவை அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அதன்படி, பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு 2500 வெற்றிடங்களை நிரப்ப உள்ளது.

இது அதிக எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புகளாகும்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு 1615 பேரை ஆட்சேர்ப்பு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங் கள், நீதி மற்றும் கல்வி போன்ற பல முக்கிய அமைச்சுகளாலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளன. (அ)

# சிறுமியை போலி அடையாளத்தில் வெளிநாடு அனுப்பிய முகவருக்கு 12 ஆண்டுகள் கடூழியம்!

## கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 12

பாட்டியால் வளர்க்கப்பட்ட 15 வயது சிறுமியை போலி ஆவணங்களை தயாரித்து வீட்டு வேலைக்காக ஜோர்தான் நாட்டுக்கு அனுப்பியவருக்கு 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறை விதித்துத் தீர்ப்பளித்தது கொழும்பு உயர்நீதிமன்றம்.

கிண்ணியாவை சேர்ந்த 59 வயது நபருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றவாளி, தாய், தந்தையரை பிரிந்து பாட்டியுடன் வசித்த 15 வயது சிறுமியை வேறொரு பெண்ணின் ஆவணங்களை பயன்படுத்தி போலி ஆவணங்களை தயாரித்து அவரை வீட்டு வேலைக்காக ஜோர்தான் நாட்டுக்கு 2008ஆம் ஆண்டு அனுப்பியுள்ளார். வெளிநாடு செல்ல மறுத்த சிறுமியை மிரட்டி அனுப்பி வைத்தார் என்பது வழக்கு விசாரணைகளில் சான்றுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதியரசர் நவரட்ண மாரசிங்க குற்றவாளிக்கு 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

மேலும், பாதிக்கப்பட்டவருக்கு 3 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட்ட நீதியரசர், இழப்பீடு மற்றும் அபராதம் செலுத்தாதுவிடின் மேலும் ஒன்றரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்கவும் உத்தரவிட்டார். (ஐ)

# பெண் மருத்துவர் வன்புணர்வு; சந்தேகநபர் முன்னாள் சிப்பாய்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, மார்ச் 12

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிய பெண் மருத்துவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் விரைவில் கைது செய்யப்படுவார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் பெண் மருத்துவர் மீதான வன்புணர்வு சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் எடுத்துரைத்தார். இந்தச் சம்பவம் கவலைக்குரியது.

குற்றவாளியை கைது செய்வதற்கு ஐந்து விசேட பொலிஸ் குழுக்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இராணு வத்தில் இருந்து தப்பிச்சென்ற நபர் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேக நபர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார். விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

கொழும்பு, மார்ச் 12

காட்டு யானை தாக்கி மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தறை - கிரிந்த பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில், 55 வயதான மீனவரே உயிரிழந்தார்.

மீன்பிடி தொழிலுக்காக இருவருடன் சென்று கொண்டிருந்தபோதே யானை தாக்கி குறித்த நபர் உயிரிழந்தார். (ஐ)

# வங்கி ஒன்றின் கதவை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

கொழும்பு, மார்ச் 12

களுத்துறை , புலத்சிங்கள பிரதேசத்தில் வங்கி ஒன்றின் கதவை உடைத்து பெறுமதியான பொருட்களைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் புலத்சிங்கள பொலிஸாரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

புலத்சிங்கள பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புலத்சிங்கள பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வங்கியிலிருந்து திருடப்பட்டதாக கூறப்படும் கணினி மற்றும் பல்வேறு இலத்திரனியல் உபகரணங்கள் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும்,கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புலத்சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தலில் 155,976 புதிய வாக்காளர்!

## தேர்தல் ஆணையகம் தகவல்

**கொழும்பு, மார்ச் 12**
**இந்த ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் 155,976 புதிய வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.**

கடந்த வருடம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தகுதி பெற்ற வாக்காளர்களுக்கு மேலதிகமாக இந்தப் புதிய வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையகத்தின் கூற்றுப்படி, புதிய வாக்காளர்கள் 2024 ஒக்ரோபர் 1 மற்றும் 2025 பெப்ரவரி 1 ஆகிய திகதிகளில் சான்றளிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இந்த ஆண்டு திட்டமிடப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்காக மொத்தம் 1,729,330 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கிடையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஆரம்ப ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையகத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க உறுதிப்படுத்தினார்.

மேலதிகமாக தேர்தலுக்கான தபால்மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இன்று புதன்கிழமை முடிவடையும் என்று ஆணையகம் தெரிவித்துள்ளது.

தகுதியுள்ள தபால்மூல வாக்காளர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டத்தின் தேர்தல் அதிகாரியிடம் இறுதி திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். (அ)

# விசேட ரயில் சேவைத் திட்டம்!

கொழும்பு, மார்ச் 12
2025 மார்ச் மாத பாடசாலை விடுமுறை மற்றும் சிவனொளி பாத மலை யாத்திரை பருவத்துடன் இணைந்து ஒரு சிறப்பு ரயில் சேவையை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

அதன்படி கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளை மற்றும் காங்கேசன்துறைக்கும் சிறப்பு ரயில் சேவைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவிப்பு இலங்கை ரயில்வே பொது முகாமையாளர் ஜே.ஐ.டி.ஜெயசுந்தரவினால் வெளியிடப்பட்டுள்ளது.

01. சிறப்பு ரயில் 01 - கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளைக்கு - மார்ச் 12, 14, 16, 21, 23, 28 மற்றும் 31 ஆகிய திகதிகளில் கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 07.30 மணிக்கு ரயில் புறப்படும்.

02. சிறப்பு ரயில் 02 - பதுளையில் இருந்து கொழும்பு கோட்டைக்கு - மார்ச் 12, 14, 16, 21, 23, 28 மற்றும் 31 ஆகிய திகதிகளில் பதுளையில் இருந்து மாலை 05.20 மணிக்கு ரயில் புறப்படும்.

03. சிறப்பு ரயில் 03 - கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை - மார்ச் 13 முதல் மார்ச் 31 வரை அன்றாடம் காலை 05.30 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து ரயில் புறப்படும்.

04. சிறப்பு ரயில் 04 - காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு, கோட்டை - மார்ச் 13 முதல் மார்ச் 31 வரை அன்றாடம் பிற்பகல் 01.50 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து ரயில் புறப்படும். (அ)

# 6,160 இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு!

கொழும்பு, மார்ச் 12
இஸ்ரேலில் கட்டுமானத் துறையில் 6,160 இலங்கையர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இஸ்ரேல் அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேலும், 2025 ஜனவரியில் இருந்து 1,082 இலங்கை இளைஞர்கள் இஸ்ரேலில் கட்டுமான பணிகளுக்காகச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலில் நிர்மாணத்துறையில் வேலை வாய்ப்பு பெற்ற 41 வேலை தேடுபவர்களுக்கு நேற்று முன் தினம் பணியகத் தலைவர் கோசல விக்கிரமசிங்க தலைமையில் விமானச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

இந்த குழு நேற்று முன் தினம் இஸ்ரேல் புறப்பட்டு சென்றது.

மேலும் 177 பேர் இஸ்ரேலில் கட்டுமானப் பணிகளுக்காக வெளியேறத் தயாராகி வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களாக பாரம்பரிய கட்டமைப்பிலிருந்து விலகி ஐரோப்பிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு தொழிலாளர்கள் செல்லும் போக்கு காணப்படுவதாகவும், அதற்கேற்ப இலங்கையர்கள் இஸ்ரேலுக்கான வேலைகளுக்கு விண்ணப்பிக்க அதிக ஆர்வம் காட்டுவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களுக்கு பிரதி அமைச்சர் வட்டகல அடைக்கலம்?

## உதய கம்மன்பில கருத்து

கொழும்பு, மார்ச் 12
நாட்டில் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களுக்கு, பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அடைக்கலம் வழங்குகின்றாரா என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொலிஸ் மா அதிபர் யார் என்பதையும் சட்ட நிபுணர் மற்றும் நீதி பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அறியவில்லை.



அண்மையில் கூட்டமொன்றில் பேசும்போது தேசபந்து தென்னக்கோனை முன்னாள் பொலிஸ் மா அதிபர் என குறிப்பிட்டிருந்தார்.

பிரியந்த வீரசூரிய இன்னமும் நாட்டின் பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதற்கு தேசபந்து இன்னும் பொலிஸ் மா அதிபராக பதவி வகிப்பதே காரணம் என்பது கூட சுனில் வட்டகலவுக்கு தெரியவில்லை.

தேசபந்து 65 ஆயிரம் சதுர அடிகள் கொண்ட நிலப்பகுதியில் ஒளிந்திருக்கிறார் எனவும், இது சுமார் 239 பேர்ச் அல்லது 1.5 ஏக்கர் அளவுடைய பகுதி எனவும் சுனில் வட்டகல கூறியிருந்தார்.

இத்தகைய சிறிய பகுதியில் ஒளிந்திருக்க வேண்டும் என்றால், அங்கு 20 பொலிஸாரை அனுப்பினால் ஒரு மணி நேரத்திற்குள் அவரை கைது செய்யலாம் அல்லவா?

இதற்கு முன்னர் பாதாள உலகத்தின் தலைவரான ஒருவர் மத்துகம பகுதியில் ஒளிந்திருப்பதாக நீதி பிரதி அமைச்சர் கூறியிருந்தார்.

இந்நிலையில், நீதி பிரதி அமைச்சர் பிடிவிராந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களை மறைத்து வைத்திருக்கின்றாரா?-என்றார். (அ)

# இறக்குமதி செய்த வாகனங்களை மீளவும் ஏற்றுமதி செய்வதில்லை!

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம்

கொழும்பு, மார்ச் 12
நாட்டுக்கு அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட 196 வாகனங்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பரவும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட விதிமுறைகளை மீறியும், தவறான உற்பத்தி திகதிகளுடன் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், வாகனங்கள் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளின்படி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றை மீண்டும் ஏற்றுமதி செய்யும் திட்டம் எதுவும் இல்லை எனவும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

தற்போது பழைய வாகனங்கள் எவையும் இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கப்பலில் ஏற்றும் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கு முன்னதாக உற்பத்தி செய்யப்பட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு சட்ட ரீதியாக அனுமதி உள்ளது.

சுங்கத்தினால் இந்த வாகனங்கள் முறையாக பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் குறித்த வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

பொய்யான பல முறைப்பாடுகள் இந்த வாகனங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை தொடர் பிலும் சுங்கத்தினரால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எனவே, பழைய வாகனங்கள் எவையும் இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் எந்தவொரு வாகனமும் மீள ஏற்றுமதி செய்யப்படமாட்டாது எனவும் வாகன இறக்கும தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார். (அ)

# தண்டவாளம் உடைந்ததால் ரயில் சேவைகள் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 12
கடலோர ரயில் பாதையில் தண்டவாளம் உடைந்ததால் ரயில் போக்குவரத்து தாமதமாகியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களுக்கு அருகில் தண்டவாளம் உடைந்துள்ளது.இதன் விளைவாக அந்த நிலையங்கள் வழியாக செல்லும் அனைத்து ரயில்களும் தாமதமாகலாம் என அறிவிக்கப்பட்டது. (அ)

# பஸ் மிதிபலகையிலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 12
பயணிகள் பஸ்ஸின் முன் பக்க மிதிபலகையில் பயணித்த ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவின் /ஹம்பஸ்வலான பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

ருவன்வெல்லவிலிருந்து தன்னோருவ நோக்கி பயணித்த பயணிகள் பஸ்ஸிலிருந்து குறித்த நபர் கீழே விழுந்துள்ளார்.

உயிரிழந்தவர் /ஹம்பஸ்வலனை, ருவான்வெல்ல பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவருக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக்குறைவு காரணமாக மிதி பலகையில் அமர்ந்திருந்தபோது, அதிலிருந்து கீழே விழுந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சடலம் கரவனெல்லை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று பிரசித்தி பெற்ற அம்பாறை மாவட்டம், கல்முனை தரவை பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் மாம்பழத் திருவிழா நேற்று முன்தினம் மாலை சிறப்பாக நடைபெற்றது.
(படங்கள் :- வி. ரி. சகாதேவராஜா)

# தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்த வேண்டாம்

## ஹிஸ்புல்லா எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச்.12

**பாராளுமன்றில் தனக்கு இருக்கும் உரிமையைப் பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகவும் மார்க்கத்துக்கு எதிராகவும் பேசுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எம். ஹிஸ்புல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.**


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பில் அவ்வப்போது பேசப்பட்டு வருகின்றன. அதில், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால் அது தொடர்பில் முஸ்லிம் கலாசார திணைக்களம், ஜம்மியதுல் உலமா, நீதி அமைச்சு, முஸ்லிம் எம்.பிக்கள், அரசாங்கத் தரப்பினருடன் அதனை கலந்துரையாடி மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லாமல் முஸ்லிம் சமூகத்தை தூண்டும் வகையில் அது தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. இது தமிழ் - முஸ்லிம் மக்களிடையில் பிளவை ஏற்படுத்தக்கூடும்.

பாராளுமன்றில் முஸ்லிம்களின் மனதை புண்படுத்தும் வகையில் பேசிவிட்டு, அது சார்பில் அவர்கள் விளக்கங்களை கேட்கையில், மிகவும் மோசமாகவும் கேவலமாகவும் அறிக்கைகளை வெளியிடுவது தமிழ் மக்கள் இடத்திலும் முஸ்லிம் மக்கள் இடத்திலும் பெரும் பிரச்னைகளை ஏற்படுத்தும்-



என்றார்.

மேலும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வைத்திய, சட்ட மற்றும் சுற்றுலா பீடங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொத்துவில் பிரதேசத்துக்கு தனியான கல்வி வலயம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

(எ)

# முஸ்லிம் மத விவகாரம் தொடர்பான கருத்துகளை வாபஸ் பெற வேண்டும்

## அர்ச்சுனா எம்.பியிடம் அஷ்ரப் தாஹிர் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச்.12

இஸ்லாமிய விவாகம், விவாகரத்துச் சட்டம் தொடர்பில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் தெரிவித்த கூற்றுக்களை வாபஸ் பெற வேண்டும். அத்துடன், அவர் அந்த நிலைப்பாட்டிலிருந்து மாற வேண்டுமென திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கல்வியமைச்சின் மீதான வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா எனது நல்ல நண்பர். அவர் அண்மையில் எமது மார்க்கத்துக்குள் மூக்கை நுழைத்து விட்டார். அவர் அதைத் தெரிந்து செய்தாரா? அல்லது விளம்பரத்துக்காக செய்தாரா? என்பது புரியவில்லை. அவரை நாங்கள் தண்டிக்க முடியாது. என்றாலும், அவருக்கு எமது மார்க்கத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய தேவை உள்ளது.

நாட்டில் ஒட்டுமொத்த மக்களுக்கும் நாம் கூறிக் கொள்ளும் விடயம் என்னவென்றால், நாங்கள் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுள்ளோம். எங்களது மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. அதிலே எவரும் மூக்கை நுழைத்து மாற்றங்களை செய்ய முடியாது.

ஒரு மனிதனுடைய பிறப்பிலிருந்து, மரணிக்கும் வரைக்கும் உள்ள விடயங்கள் எங்கள் மார்க்கத்தில் கூறப்பட்டுவிட்டன. ஒரு மனிதனின் பிறப்பில் இருந்து மரணித்து நல்லடக்கம் செய்யும் வரைக்குமான விடயத்தை எமது புனித அல் குர் ஆனும் முஹம்மது நபியும் எங்களுக்கு போதித்துள்ளனர்.

அதில் ஆணாக இருந்தால் எவ்வாறு அல்லது பெண்ணாக இருந்தால் எவ்வாறு வாழ வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது" - என்றார்.

(எ)

# அடிக்கல் நாட்டும் விழா

திருக்கோவில், மார்ச்.12

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் நுழைவாயிலின் முகப்பு தோற்றத்தை மாற்றியமைப்பதற்காக புதிய நுழைவாயிலுக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிபர் கே. கங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில், புதிய நுழைவாயில் அமைக்க நிதியுதவி வழங்கிய சுந்தரலிங்கம் சசிகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.(எ- 07)



# துறைநீலாவணை குளக்கரையில் தினமும் குவிக்கப்படும் குப்பைகள்

கல்முனை, மார்ச்.12

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட துறைநீலாவணை குளப்பகுதியில் தினமும் ஆடு, மாடு மற்றும் கோழிக்கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பெரியநீலாவணைச் சந்தியிலிருந்து துறைநீலாவணை நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் இடப்பக்கமுள்ள குளக்கரையில் தினமும் இத்தகைய குப்பைகள் இனந்தெரியாதோரால் கொட்டப்பட்டு வருகின்றன.

துறைநீலாவணைக் கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்எருவில் பற்று பிரதேசத்துக்குள் வருகிறது.

ஆனால், அந்தக் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதியின் இடப் பக்கத்தில் உள்ள குளங்கள், வயல்கள் கல்முனை மாநகர சபைக்குள் வருகின்றன.

இதனால், குப்பை பிரச்னையை யார் கவனிப்பது? யாரிடம் முறையிடுவது என்பது தொடர்பில் மக்கள் குழப்பமடைத்துள்ளனர்.

இங்கு குப்பை கொட்ட வேண்டாம் என்று மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை அறிவித்தல் பலகை போட்டுள்ளது. எனினும், இது தொடர்கிறது.

நேற்று முன்தினம் கூட அங்கு குப்பை பொதிகளை வீசிய போது ஒருவர் பிடிபட்டார். வீசிய குப்பைகளை மீள எடுக்கச் செய்த இளைஞர்கள் அவரை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இனமுறுகலையும் தோற்றுவிக்கும் அபாயம் உள்ளது எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் குடியிருப்பாளர்கள் பல தடவைகள் கல்முனை மாநகர சபையிடமும் பொதுச் சுகாதார பரிசோதகரிடமும் முறையிட்டும் இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கக்கப்படவில்லை.

(எ- 07)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்வு

கல்முனை, மார்ச்.12

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட தேர்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் தலைமையில் கடந்த 9 ஆம் திகதி ஒலுவில் தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதன்போது, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். எஸ். உதுமாலெப்பை, கட்சியின் பிரதித் தலைவர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஐ. எம். மன்சூர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். எம். ஏ. கபூர் உள்ளிட்ட முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் - வேதிப்பொருளுடன் இரண்டு கப்பல்கள் மோதி விபத்து

லண்டன், மார்ச்.12

**விமான எரிபொருள் - வேதிப்பொருள் ஏற்றிச்சென்ற இரண்டு சரக்கு கப்பல்கள் ஒன்றோடு ஒன்று மோதி பெரும் விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், இரு கப்பல்களும் தீப் பிடித்து எரிகின்றன.**



கிரீஸிலிருந்து போர் விமானத் துக்குப் பயன்படுத்தப்படும் எரி பொருளை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவுக்கு சரக்கு கப்பல் ஒன்று சென்றுகொண்டிருந்தது. இதேவேளை, ஸ்கொட்லாந்தி லிருந்து வேதிப்பொருட்களை ஏற்றிக்கொண்டு நெதர்லாந் துக்கு சரக்கு கப்பல் ஒன்று சென்றுகொண்டிருந்தது. இந்த இரு கப்பல்களிலும் மொத்தம் 36 மாலுமிகள் பயணித்தனர்.

இங்கிலாந்து தெற்கு கடற்ப குதியில் நேற்று அதிகாலை இந்த சரக்கு கப்பல்கள் சென்று கொண்டிருந்தபோது ஒன்றோடு ஒன்று மோதின. இதனால், இரு கப்பல்களும் தீப்பற்றி எரிந்தன.

தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு, மீட்புப்படையி னர் கப்பல்களில் பற்றி எரிந்து வரும் தீயை அணைக்கும் முயற் சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சம்பவத்தில் கப்பலில் சிக்கித்தவித்த 35 மாலுமிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள னர். ஒரே ஒரு மாலுமி மட்டும் மாயமான நிலையில் அவரைத் தேடும் பணி தீவிரமாக நடை பெற்று வருகிறது. (எ)



## "தமிழக எம்.பிக்கள் அநாகரிகமானவர்கள்"

புதுடில்லி, மார்ச்.12

தேசிய கல்விக் கொள்கை விவகாரத்தில் தி. மு. க. வேண் டுமென்றே அரசியல் செய்வ தாக மக்களவையில் இந்திய மத் திய கல்வி அமைச்சர் தர்மேந் திர பிரதான் கடுமையாக விமர் சித்தார். 'ஜனநாயகத்துக்கு விரோதமானவர்கள், அநாகரி கமானவர்கள்' என்று அவர் கூறியதற்கு தி. மு. க. எம்.பிக் கள் கடும் ஆட்சேபம் தெரிவித் தனர். அவர் மீது கனிமொழி எம். பி. உரிமை மீறல் நோட் டீஸ் வழங்கியதையடுத்து, தனது கருத்தை திரும்பப் பெறு வதாக அமைச்சர் தெரிவித்தார்.

மக்களவையில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மற்றும் தி.மு.க. எம்.பிக்கள் இடையே நேற்று முன்தினம் காரசாரமான விவாதம் நடை பெற்றது. இந்த நிலையில், அவைக்கு வெளியே, கனிமொழி உள்ளிட்ட எம்.பிக்களுடன் அமைச்சர் தர்மேந்திர பிரதான் இயல்பாக கலந்துரையாடினார். (எ)

## போரை முடிவுக்கு கொண்டுவர உக்ரைன் அரசு பேச்சுக்கு தயார்

கீவ், மார்ச்.12

போரை முடிவுக்கு கொண் டுவரசவுதி அரேபியாவில் இந்த வாரம் அமெரிக்காவுடன் பேச் சுகள் நடத்த தனது அரசாங்கம் தயாராகவுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரி வித்தார்.

ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த 2022ஆம் ஆண்டு பெப் ரவரி மாதம் முதல் போர் நடை பெற்று வருகிறது.

இந்த நிலையில், கனிமவள ஒப்பந்தம் தொடர்பிலும், ரஷ் யாவுடனான போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பி லும், அமெரிக்காவுடன் பேச் சுக்கு தயாராக இருப்பதாகவும் ஜெலன்ஸ்கி அறிவித்துள்ளார். இந்த வாரம் சவுதி அரேபியா வில் பேச்சுகள் நடைபெறும் என்று தான் எதிர்பார்ப்பதாக வும் கூறினார். கீவ் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பில் அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.(எ)

# சைபர் குற்றங்களில் ஈடுபட்ட 283 இந்தியர்கள் அரசால் மீட்பு

நைபிடா, மார்ச்.12

மியன்மாரில் சைபர் குற்றங் களில் ஈடுபடுத்தப்பட்ட 283 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்.

மியன்மார், தாய்லாந்து போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பு எனக்கூறி இந்தியர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சட்டவிரோத வேலை கள், சைபர் குற்றங்களில் ஈடுப டுத்தப்படும் சம்பவங்கள் அதிக ரித்து வருகின்றன. இவ்வாறான சைபர் குற்றங்களில் ஈடுபட மறுப்பவர்கள் மின்சாரம் பாய்ச் சியும், பணயக் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டு சித்தி ரவதை செய்யப்படும் சம்பவங் களும் அரங்கேறி வருகின்றன. இவ்வாறு சட்டவிரோத செயல் கள், சைபர் குற்றங்களில் ஈடுப டுத்தப்பட்டுள்ள இந்தியர்களை மீட்க மத்திய அரசு தீவிர நடவ டிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், மியன்மா ருக்கு அழைத்துச் செல்லப் பட்டு சைபர் குற்றங்களில் ஈடுப டுத்தப்பட்ட 283 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் தாய்லாந்தின் மயொ சட் நகருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து இந்திய விமானப்படை விமா னம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (எ)

# இந்தியாவுடனான உறவை மீளக்கட்டியெழுப்ப வாய்ப்பு

### கனடாவின் புதிய பிரதமர் தெரிவிப்பு



ஒட்டாவா, மார்ச்.12

இந்தியா உடனான உறவை மீண்டும் கட்டியெழுப்ப வாய்ப் புகள் உள்ளன என்றும், அதனை தான் எதிர்பார்ப்பதாகவும் கனடாவின் புதிய பிரதமராக தெரிவாகியுள்ள மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இந்தியா - கனடா இடையி லான உறவுகளில் தூதரக ரீதி யில் பெரும் மாற்றங்கள் ஏற்ப டவுள்ளன என்றும் அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் ஒட்டாவா வில் நடைபெற்ற வெற்றிக்கொண் டாட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "அமெரிக்க ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப், வர்த்தகப் போரைத் தொடரும் வரை அமெரிக்கப் பொருட்கள் மீதான பரஸ்பர வரியை கனடா கைவிடாது. கனடா அரசு சரி யான பாதையிலேயே செல்கி றது. நமக்கு அமெரிக்கா உரிய மரியாதை கொடுத்து நம்பகத் தன்மை வாய்ந்த, நியாயமான வர்த்தகத்தை உறுதி செய்யும் வரை நாம் விதித்த வரி அமு லில்தான் இருக்கும்"- என்றார். (எ)

# பூமிக்கு திரும்புகிறார் சுனிதா வில்லியம்ஸ்

### திகதியை அறிவித்தது நாசா

வாஷிங்டன், மார்ச்.12

சுனிதா வில்லியம்ஸ் இம் மாதம் 16ஆம் திகதி பூமிக்கு அழைத்து வரப்படுவார் என்று நாசா தெரிவித்துள்ளது.

விண்வெளிக்கு சென்று தங்கி ஆய்வு செய்ய சுனிதா வில்லியம் ஸூம், புட்ச் வில்மோரும் கடந்த வருடம் ஜூன் 5 ஆம் திகதி போயிங்கின் ஸ்டார்லைனரில் 10 நாட்கள் பயணமாக சென்ற னர். ஆனால், இருவரும் ஒன் பது மாதங்களாக விண்வெளி நிலையத்திலிருந்து திரும்ப முடி யாமல் தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், சுனிதா வில் லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர், எலான் மஸ்கிற்கு சொந்தமான, ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத்தின் மூலம் இம்மாதம் 16ஆம் திகதி பூமிக்கு அழைத்து வரப்படு வார்கள் என்று நாசா தெரிவித் துள்ளது.

இதன்படி, இந்த வாரம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் க்ரூ-10 ரொக்கெட் விண்வெ ளிக்கு செல்லவுள்ளது. அது, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட் டோரை மீட்டு கொண்டு வரும் என்று நாசா தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம்

### அமெரிக்கர்களுக்கு அறிவுறுத்தல்

வாஷிங்டன், மார்ச்.12

பாகிஸ்தானுக்கு பயணம் செய்வதை மக்கள் மறுபரிசீ லனை செய்ய வேண்டும் என்று அமெரிக்க அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் பலுசிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்க்வா மாகாணங்களில் அண்மைக்கா லமாக பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம் என்று அமெ ரிக்கர்களுக்கு அந்த நாட்டு அரசு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளி யிட்ட அறிக்கையில், பயங்கர வாதம் மற்றும் ஆயுத மோதல்க ளுக்கான சாத்தியக் கூறுகள் கார ணமாக பாகிஸ்தானுக்கு பய ணம் செய்வதை மக்கள் மறுபரி சீலனை செய்ய வேண்டும். பலு சிஸ்தான், கைபர் பக்துன்க்வா மாகாணங்கள், இந்தியா - பாகிஸ்தான் எல்லை மற்றும் கட்டுப்பாட்டுக்கோட்டின் அரு கில் உள்ள பகுதிகளுக்கு அமெரிக் கர்கள் பயணம் செய்ய வேண் டாம் என்று தெரிவித்துள்ளது.

# எக்ஸ் தளம் மீது சைபர் தாக்குதல்

### பின்னணியில் உக்ரைன் - எலான் மஸ்க் குற்றச்சாட்டு

வாஷிங்டன், மார்ச்.12

எக்ஸ் தளம் மீதான சைபர் தாக்குதலின் பின்னணியில் உக் ரைன் உள்ளதாக எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எலான் மஸ்க்கிற்கு சொந்த மான எக்ஸ் சமூக வலைத்தளம் நேற்று முன்தினம் உலகளவில் முடங்கியது. பிற்பகல் 03.00 மணியளவில் எக்ஸ் தளம் முடங் கியதால் பயனாளர்கள் அவதிய டைந்தனர். சுமார் ஒரு மணிநேர முடக்கத்துக்குப்பின் 04.00 மணி யளவில் எக்ஸ் தளம் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது. இது சைபர் தாக்குதல் என்பது தெரி யவந்துள்ளது.

இந்த நிலையில், எக்ஸ் தளம் மீதான சைபர் தாக்குதலின் பின் னணியில் உக்ரைன் உள்ளதாக எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள் ளார்.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு வழங்கிவந்த இரா ணுவ உதவிகளை அமெரிக்கா நிறுத்தியுள்ளது. இந்த விவகாரத் தில் உக்ரைன், அமெரிக்கா இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. அமெரிக்க ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் தலை மையிலான அரசில் முக்கிய பொறுப்பில் எலான் மஸ்க் உள் ளார். தற்போது எலான் மஸ் கின் எக்ஸ் தளம் முடக்கப்பட்ட நிலையில் இதற்கு உக்ரைன் தான் காரணம் என அவர் குற் றஞ்சாட்டியுள்ளமை பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி



மும்பை, மார்ச்.12

9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தி மும்பை அணி வெற்றி பெற்றது.

மகளிர் பிரீமியர் லீக் தொடரில் இந்தியாவின் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 19ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத்ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 179 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 180 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி குஜராத் களமிறங்கியது. இறுதியில் அந்த அணி வெற்றிபெற இரண்டுஓவர்களில் 22 ஓட்டங்கள் தேவை என்ற நிலை ஏற்பட்டது.ஆனால், குஜராத் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 170 ஓட்டங் களை மட்டுமே பெற முடிந்தது. இதன்மூலம், மும்பை அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.(எ)

## இண்டியன்வெல்ஸ் ரென்னிஸ் 4ஆவது சுற்றில் சிட்சிபாஸ்

கலிபோர்னியா, மார்ச்.12

இண்டியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் சிட்சிபாஸ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இண்டியன்வெல்ஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது.



இதில், நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான கிரீஸை சேர்ந்த சிட்சிபாஸ், இத்தாலியின் மேட்டியோ பெரேட்டினியுடன் மோதினார். இந்த போட்டியில் 6-3, 6-3 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்ற சிட்சிபாஸ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## சம்பியன்ஸ் கிண்ண சிறந்த அணி தெரிவு



டுபாய், மார்ச்.12

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சிறந்து விளங்கிய வீரர்களை கொண்ட அணியை தெரிவு செய்து ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்ற 8 அணிகள் இடையிலான 9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் கடந்த 9 ஆம் திகதி நிறைவடைந்தது. இதில், நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்த நிலையில், இந்தத் தொடரில் சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்திய வீரர்களை கொண்டு சிறந்த அணியை உருவாக்கி ஐ.சி.சி. அறிவித்துள்ளது. மிட்செல் சாண்ட்னர் தலைமையிலான அந்த அணியில் 6 இந்திய வீரர்கள் (12ஆவது வீரராக அக்சர் பட்டேல்), 4 நியூசிலாந்து மற்றும் 2 ஆப்கானிஸ்தான் வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகளிலிருந்து ஒரு வீரர் கூட இடம்பெறவில்லை.

ஐ. சி. சி. தெரிவு செய்த அணி விவரம் வருமாறு, ரச்சின் ரவீந்திரா, இப்ராஹிம் சத்ரான், விராட் கோலி, ஸ்ரேயஸ் ஐயர், கே. எல். ராகுல், கிளென் பிலிப்ஸ், அஸ் த்துலா ஒமர்சாய், மிட்செல் சாண்டர் (தலைவர்), ஷமி, மேட் ஹென்றி, வருண் சக்கரவர்த்தி ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

## நியூசிலாந்து - பாகிஸ்தான் ரி - 20 போட்டி 16ஆம் திகதி

வெலிங்டன், மார்ச்.12

நியூசிலாந்து - பாகிஸ்தான் மோதும் முதல் ரி - 20 போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது. இதில், இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி 16ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இந்தத் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய தலைவராக மைக்கேல் பிரெஸ்வெல் நியமிக்கப்பட்டுள்ளார். இதில், கைல் ஜேமிசன் மற்றும் வில்லியம் ஓரூர்க் ஆகியோர் முதல் 3 போட்டிகளில் மட்டுமே விளையாடவுள்ளனர். இவர்களுக்கு பதிலாக ஜாக் பவுல்க்ஸ் மற்றும் மேட் ஹென்றி ஆகியோர் கடைசி 2 போட்டிகளுக்கான அணியில் இடம்பெற்றுள்ளனர்.

நியூசிலாந்து அணி விவரம் வருமாறு,மைக்கேல் பிரெஸ்வெல், பின் ஆலன், மார்க் சப்மேன், ஜேக்கப் டபி, ஜாக் பவுல்க்ஸ், மிச் ஹே, மேட் ஹென்றி, கைல் ஜேமிசன், டேரில் மிச்செல், ஜிம்மி நீஷம், வில்லியம் ஓரூர்க், ரிம் ரொபின்சன், பென் சீயர்ஸ், ரிம் சீபெர்ட் மற்றும் இஷ் சோதி ஆகியோர் அணியில் சேர்க்கப் பட்டுள்ளனர். (எ)

## “கவாஸ்கர் தனது நாவை கட்டுப்படுத்த வேண்டும்”




கராச்சி, மார்ச்.12

தற்போதுள்ள பாகிஸ்தான் அணியை இந்திய பி அணியே எளிதில் தோற்கடிக்கும் என்று கவாஸ்கர் விமர்சித்திருந்தார். இதற்கு, கவாஸ்கர் தனது நாவை கட்டுப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இன்சமாம்-உல்-ஹக் பதிலடி கொடுத்துள்ளார்.

“இந்தியா போட்டியில் வெற்றி பெற்றது. அவர்கள் நன்றாக விளையாடினார்கள். ஆனால், மிஸ்டர் கவாஸ்கர் புள்ளி விவரங்களை பார்க்க வேண்டும். ஒருமுறை அவர் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடுவதிலிருந்து தப்புவதற்காக ஷார்ஜாவுக்கு பறந்தார். அவர் எங்களை விட வயதானவர். நாங்கள் அவரை மிகவும் மதிக்கிறோம். ஆனால், அவர் எங்களுடைய நாட்டை பற்றி இவ்வாறு பேசக்கூடாது.

உங்களது அணியை தேவையான அளவுக்கு பாராட்டுங்கள். ஆனால், மற்ற அணிகளை இவ்வாறு பேசுவது நல்லதல்ல. கவாஸ்கரை புள்ளி விவரங்களை பார்க்க சொல்லுங்கள். அவருக்கு பாகிஸ்தான் எங்கே இருக்கிறது என்று தெரியும். நான் அவருடைய கருத்தால் ஆழமான காயத்தை சந்தித்தேன். அவர் சிறந்த மரியாதைக்குரிய கிரிக்கெட்டர். ஆனால், இது போன்ற கருத் தெரிவிப்பதால் அவர் தனது மதிப்பை குறைத்துக் கொள்கிறார். அவர் தன்னுடைய நாவை கட்டுப்படுத்த வேண்டும்”- என்று கூறினார். (எ)

## ரைபகினா வெற்றி

கலிபோர்னியா, மார்ச்.12

3ஆவது சுற்று ஆட்டத்தில் ரைபகினா அசத்தல் வெற்றி பெற்றுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இண்டியன்வெல்ஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது. இதில்,மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானை சேர்ந்த முன்னணி வீராங்கனையான ரைபகினா, இங்கிலாந்தின் காடி போல்டெருடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய ரைபகினா 6 - 0, 7-5 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



## 9 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அபார வெற்றி



ராஜ்பூர், மார்ச்.12

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் இலங்கை 150 ஓட்டங்கள் அடித்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி - 20 தொடரில் இந்தியாவின் ராஜ்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை - இங்கிலாந்து அணிகள் . மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 147 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி சார்பில் குமார் சங்கக்காரா அபாரமாக விளையாடி சதமடித்து வெற்றியை பெற்றுக் கொடுத்தார். வெறும் 12. 5 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்த இலங்கை 150 ஓட்டங்கள் அடித்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (எ)

## ஜெசிகா அதிரடி ஆட்டம்



கலிபோர்னியா இண்டியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இண்டியன்வெல்ஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, சீனாவின் வாங் சின்யுடன் மோதினார்.

இதில், முழுவதுமாக ஆதிக்கம் செலுத்திய ஜெசிகா பெகுலா 6 - 2 மற்றும் 6-1 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு (4ஆவது சுற்று) தகுதி பெற்றுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்முறையீட்டு...

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் நீதிமன்றங்களில் நீதிவான், நீதிபதி, மேல் நீதிமன்ற நீதிபதியாக முன்னர் பதவி வகித்திருந்தார்.

சுமார் 28 ஆண்டுகள் நீதித்துறையில் கடமையாற்றியுள்ள அவர் யாழ்ப்பாணம் - வடமராட்சி - துன்னாலையை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, டபிள்யூ. கே. எஸ். யூ. பிரேமச்சந்திர, கே. பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரும் நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக பதவியேற்றனர். (ஐ)

## தேர்தலுக்கு...

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவ தற்காக யாழ்ப்பாணத்தில் கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இம்முறை ஆட்சி அமைக்கும் என்று உறுதியான நம்பிக்கை உள்ளது.

மாநகர முதல்வர், நகர பிதா, மற்றும் தவிசாளர் யார் என்பதை முன்னரே அறிவிப்பதில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. இதனால், அந்தப் பதவிகளுக்கு உரியவர்களின் பெயர் தேர்தலுக்கு பின்னரே அறிவிக்கப்படும். அநேகமாகப் புதியவர்கள் பலர் இம்முறை கட்டாயம் நியமிக்கப்படுவார்கள். தமிழ் அரசுக் கட்சிக்கு அதிகமான வேட்பாளர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு அதிகமானவர்கள் இருப்பதால் யாரை நிறுத்துவது என்பதில் இழுபறி நிலை இருக்கிறது.

அது வழமையாக எங்களுக்கு இருக்கும் பிரச்னைதான். முதன்மையான கட்சிகளில் போட்டியிடுவதற்கு பலர் ஆர்வம் காட்டுவார்கள். இதனால், எமக்கு இழுபறி வந்தாலும் அதனை நாங்கள் சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு யார், யார் வேட்பாளர்கள் என்பதைத் தீர்மானிப்போம் - என்றார். (ஐ)

## புதிய...

துரோகி என்று சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவின் வலதுகரமாகவும், முதுகெலும்பாகவும் செயல்பட்ட சீ. வீ. கே. சிவஞானம் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டமை, பதில் செயலாளர் சத்தியலிங்கத்துக்கு சுகவீனம் என்று கூறி பதில் செயலாளர் பதவியை சுமந்திரன் சுருட்டி இருப்பது போன்ற காரணங்களால் இனியும் தமிழ் அரசை திருத்த முடியாது என்ற நிலைக்கு தமிழ்த் தேசிய தீவிரசக்திகள் வந்துள்ளன. இவையே புதிய தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கக் காரணம்.

"தமிழ் அரசுக் கட்சியின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் கிழக்கில் நால்வரும் வடக்கில் இருவரும் 'புதிய தமிழ் அரசு' அமைவதில் உடன்பாடுடையவர்களாக இருக்கின்றனர் என்று தமிழ்நாட்டில் உள்ள மூத்த தமிழ்த் தேசியவாதியின் வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

"சுமந்திரன் அணியைச் சேர்ந்த சாணக்கியன், சத்தியலிங்கத்தை தள்ளி வைத்து இந்தத் திரைமறைவு முயற்சிகள் இடம்பெறுகின்றன. கிழக்கின் தெற்கு எல்லையைச் சேர்ந்த "பி2பி" செயல்பாட்டாளரும் தமிழ் அரசுக் கட்சி தந்தையின் பேரனும் இந்தத் திரைமறைவு முயற்சிகளில் முக்கியமானவர். இவ்வாறு புதிய தமிழ் அரசுக்கு பின்னால் மூத்த புலிகளும், தாயக, தமிழக, புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் மூத்த தமிழ்த் தேசியவாதிகளும், பக்தர்களும் இருக்கிறார்கள். தமிழ் அரசு தந்தையின் பெயரை கட்சிப் பெயரில் சேர்த்துக் கொள்ளலாமா? என்றும் ஆலோசிக்கப் படுவதாக தகவல்." - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தையிட்டி...

பின்னர், இது விடயத்தில் நியாயமான முறையில் தலையிட்டு முடிவு எடுக்கமுடியும்", என்று நம்புகிறேன் - என்றார். (ஐ)

## உணவு...

பாதிக்கப்பட்ட மாணவர்கள் கரடியனாறு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 26 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதான மருத்துவம னைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவு மற்றும் குடிதண்ணீர் மாதிரிகளை பெற்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம், சிற்றுண்டிச்சாலை உரிமையாளரிடம் பொலிஸார் வாக்கு மூலம் பெற்று விசாரணைகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். (ஐ)

## மன்னார்...

விலகுவதாக அதானி நிறுவனம் தெரிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே, அரசாங்க முடிவுகளை முறைப்படுத்தப்படுவதற்காக பொறுமையாகக் காத்திருப்பதாகவும் இருப்பினும், எந்தவொரு முறையான தகவல் தொடர்பும் இல்லாத நிலையில் திட்டத்திலிருந்து விலக முடிவு செய்ததாகவும் அது மேலும் கூறியது.

மேலும், இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பரிமாற்றத் திட்டங்களை விரைவாக செயல்படுத்த எப்போதும் தயாராக இருப்பதாகவும் அதானி கிறீன் எனர்ஜி இலங்கை நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஐ)

## பெண்...

தொழிலாளி நேற்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு,

பாதிக்கப்பட்ட பெண் கடந்த 2ஆம் திகதி சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், கடந்த 7ஆம் திகதி விடுதியின் பின்புறத்தில் வைத்து மருத்துவமனையில் துப்புரவு பணியில் ஈடுபட்டவர் அவரை வன்புணர்ந் துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தார். சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையை தொடர்ந்து 36 வயது நபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## கடமை...

உடன் கைது செய்ய வலியுறுத்தியும் - மருத்துவமனையின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் கோரி அந்த மருத்துவமனையின் மருத்துவர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேநேரம், இன்று காலை 8 மணிக்கு முன்னர் குற்றவாளியை கைது செய்யாதுவிட்டால் மாகாணம் தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதனிடையே, இராணுவத்தில் இருந்து தப்பியோடியவரே சந்தேகநபர் என்று தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, சம்பவம் தொடர்பில் விசாரிக்கவும் குற்றவாளியை கைது செய்யவும் 5 பொலிஸ் குழுக்கள் செயல்படுகின்றன - என்று நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்)

# அதானி தொடர்பான அரசாங்க நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### அமைச்சரவை பேச்சாளர்

கொழும்பு, மார்ச் 12

அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. மக்களுக்கு சுமையாக அமையும் வேலைத்திட்டங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொருத்தமான வேலைத்திட்டங்களை அதானி முன்வைத்தால் அது குறித்து ஆராயப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜனாதிபதியின் இந்திய பயணத்துக்கு முன்னர் இருந்த நிலைப்பாட்டில் அவரின் இந்திய பயணத்துக்குப் பின்னர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவது உண்மையல்ல.

நாம் முதலீடுகளை ஊக்குவிக்கிறோம். அந்த வகையில் எமக்கு பொருத்தமான முதலீட்டுக்கான முன்மொழிவுகளை அதானி நிறுவனம் முன்வைத்தால் அது தொடர்பில் வெளிப்படையாக பேச்சுகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

எவ்வாறிருப்பினும் உத்தேச காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தில் மின் அலகொன்றுக்கான விலை தொடர்பில் அரசாங்கத்துக்கு உறுதியான நிலைப்பாடொன்று உள்ளது. எனவே நாம் கூறுவதைப் போன்று அந்த விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விலை திருத்தத்தை மேற்கொள்ள விரும்பினால் பேச்சுகளை தொடரலாம். அவ்வாறில்லை எனில் அவர்கள் விரும்பினால் திட்டத்தை இரத்து செய்து கொள்ளலாம். இதன் மூலம் ஏனைய சகல முதலீட்டாளர்களும் வெளியேறுவதாக அர்த்தமில்லை.

எந்த முதலீடானாலும் அது எம்மால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருக்கும்பட்சத்தில், அதனால் ஏற்படக் கூடிய சுமையை மக்கள் மீது சுமத்த வேண்டியேற்பட்டால் அவ்வாறானதொரு திட்டம் எமது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது - என்றார். (ஐ)

# மகிந்தவின் வீடு குறித்து; தேரரிடம் விசாரணை!

கொழும்பு, மார்ச் 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சொந்தமானது என்று கூறப்படும் கதிர்காமத்திலுள்ள வீடு தொடர்பில் கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரரிடம் 7 மணி நேரம் வரை வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை குற்றிப் புலனாய்வு பிரிவு திணைக்களத்தில் தம்மிந்த தேரர் தனது வாக்குமூலத்தை அளித்திருந்தார்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் கதிர்காமம் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர நேற்று முன்தினம் திங்கட்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊழல் அரசியல்வாதிகளின் முக்கிய பட்டியல் விரைவில்!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

முன்னாள் அமைச்சர்கள் அல்லது ஆட்சியாளர்களின் ஊழல்கள் தொடர்பான பட்டியல்களை வெளியிடுவதை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை. ஏற்கனவே வெளியிடப்பட்டமை போன்று பிறிதொரு முக்கிய பட்டியலொன்றும் தற்போது தயாராகிக் கொண்டிருக்கிறது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் அமைச்சர்கள் அல்லது ஆட்சியாளர்களின் ஊழல்கள் தொடர்பான பட்டியல்களை வெளியிடுவதை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை. அந்தந்த நிறுவனங்கள் அதற்கான பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன.



இதுவரை வெளியிடப்பட்ட பட்டியல்களில் இடம்பிடித்தவர்களே அவை தொடர்பில் கலவரமடைந்துள்ளனர். இன்னும் பல பட்டியல்கள் வெளியாகக் காத்திருக்கின்றன. அதேபோன்று ஏற்கனவே வெளியிடப்பட்ட பட்டியல்களில் இன்னும் சில தொகுதிகளும் உள்ளன. பொறுத்தமான சந்தர்ப்பத்தில் அவற்றையும் வெளிப்படுத்துவோம்.

இவை தவிர பிறிதொரு முக்கிய பட்டியலும் தயாராகிக் கொண்டிருக்கிறது. அது இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட பட்டியல்களைப் போன்றதல்ல. மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் பொறுப்புக்கூற வேண்டியதுமாகும். அதில் அரசியல்வாதிகள் தவிர்ந்த மேலும் பல முக்கிய புள்ளிகளும் காணப்படுகின்றனர் - என்றார். (ஐ)

## புலமைப்பரிசில்...

www.results.exams. gov.lk ஆகிய வலைத்தளங்களுக்கு சென்று பரீட்சை சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று பரீட் சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், 1911 எண் மூலம் பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்புகொள்ளாம் என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கனடா துப்பாக்கிச்சூட்டில் கோண்டாவில் யுவதி பலி!

**மேலும் ஒருவர் பலி!! மற்றொருவர் காயம்!**



ஒன்ராறியோ, மார்ச் 12

கனடாவின் மார்க்காமில் வசித்து வந்த இலங்கைப் பெண் ஒருவர் கடந்த 9ஆம் திகதி அந்த வீட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தின் முன்னாள் நகரபிதா அல்பிரட் துரையப்பாவின் பேர்த்தி எனத் தெரிவிக்கப்படுகிறது. 20 வயதுடைய ரகுதாஸ் நிலாக்ஷி என்ற பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோண்டாவிலிருந்து கனடாவுக்குச் சென்ற இந்த பெண் இரண்டு வருடங்கள் அந்த வீட்டில் வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அந்த வீட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கிச் சூட்டில் இந்தப் பெண்ணுடன் வசித்து வந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் வீட்டைக் காத்துக்கொண்டிருந்த நாயையும் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நால்வர் கெப் ரக வாகனத்தில் தப்பிச் செல்வது சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளதாக கனேடிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை கனடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கச்சதீவு திருவிழா ஏற்பாடுகள் தயார்!

## கடற்படை ஒத்துழைப்பில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 12

**கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய பெருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.**

எதிர்வரும் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த பெருவிழாவை நடத்துவதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் கடல் வழியாக கச்சதீவுக்கு கொண்டு வர கடற்படைக் கப்பல்கள் தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், நடத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவும் பணி தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

அதன்படி, இவ்விழாவுக்கு வரும் கப்பல்களுக்கு தற்காலிக இறங்குதுறைகளை அமைத்தல், குடிதண்ணீர் வசதிகள் அமைத்தல், சுகாதார வசதிகள் அமைத்தல், சாலைகள் அமைத்தல், மின்சார வசதிகள் அமைத்தல், மருத்துவ வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் முடிவடைந்த நிலையிலும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அத்துடன் விழாவுக்கு வரும் மக்களுக்கு தகவல் தொடர்பு வசதிகளை வழங்குவதற்காக கச்சதீவில் தகவல் தொடர்புக் கோபுரம் நிறுவும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டவிரோத செயல்களை தடுக்கவும், பக்தர்களின் பாதுகாப்பிற்காகவும் பாதுகாப்பு கமெரா அமைப்பைப் பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளதுடன், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவ கடற்படை முழு உழைப்பு, தொழில்நுட்ப மற்றும் வள பங்களிப்பை வழங்குவதற்கு மற்ற அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குற்றங்களுடன் தொடர்புடையோருக்கு உதவி செய்பவர்களும் கைதாவார்கள்!

கொழும்பு, மார்ச் 12

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு உதவி செய்பவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு உதவி செய்பவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுவார்கள். இவ்வாறு கைது செய்யப்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# பட்டலந்த விசாரணை அறிக்கை இந்த வாரம் பாராளுமன்றத்துக்கு அமைச்சரவையில் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 12

பட்டலந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை இந்த வாரத்துக்குள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைக் தெரிவித்தார்.

இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எடுக்க வேண்டிய அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆலோசனை வழங்கியதாக அவர் தெரிவித்தார். (அ)

# மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதிபதிகள் நியமனம்

கொழும்பு, மார்ச் 12

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள மூன்று புதிய நீதிபதிகள், ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். பதவிப் பிரமாண நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான டபிள்யூ. கே.எஸ்.யு.பிரேமச்சந்திர, கே.பிரியந்த பெர்னாண்டோ, ஏ.பிரேமசங்கர் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு புதிய நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டார். (அ)

# வைத்திய அதிகாரிகளின் இடமாற்றங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 12

தரவரிசைப்படுத்தப்பட்ட வைத்தியர்களின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அந்த விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுஅறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பின் படி, அனைத்து விண்ணப்பங்களும் ஆன்லைன் முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ள அனைத்து மருத்துவ அதிகாரிகளும் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி மார்ச் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் https://hrmis.health.gov.lk/ms/ என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு உயர்நீதிமன்றம் அழைப்பாணை!

கொழும்பு, மார்ச் 12

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றத் தவறியதற்கான காரணத்தை ஏப்ரல் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி முன்னாள் ஜனாதிபதி வெளியிட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றோயல் பார்க் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷமந்த ஜெயமஹாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பை இரத்து செய்தமையினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு மாதத்துக்குள் 1 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்த வழக்கு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன, மைத்திரிபால சிறிசேன இன்னும் குறிப்பிட்ட இழப்பீட்டுத்தொகையை செலுத்தவில்லை என்று நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

அதன்படி, நீதிமன்றம் மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் ஆஜராகி இழப்பீட்டுத் தொகை உத்தரவை மீறியதற்கான காரணத்தைக் வெளியிடுமாறுஅறிவுறுத்தி அழைப்பாணை அனுப்பியது. (அ)

# கிளிநொச்சி சேவைச் சந்தையின் வர்த்தகர்கள் நேற்று போராட்டம்!

கிளிநொச்சி, மார்ச் 12

கிளிநொச்சி சேவை சந்தை வர்த்தகர்கள் தங்களுடைய வர்த்தக நிலையங்களை மூடி நேற்று காலை முதல் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நீண்ட காலமாகத் தற்காலிக தகரக் கொட்டகைகளில் வர்த்தகத்தில் ஈடுபடும் புடைவை, அழகுசாதன மற்றும் ஏனைய வாணிப வர்த்தகர்களுக்கு நிரந்தரக் கட்ட டத்தை கட்டி வழங்குவதாக பல தரப்பினராலும் வாக்கு றுதிகள் வழங்கப்பட்டபோதிலும் இதுவரை காலமும் அவை நிறைவேற்றப்படவில்லை.

கிளிநொச்சி சேவைச்சந்தையை அண்மித்த பகுதியில் நடைபெறும் நடைபாதை வியாபாரங்களால் சேவைச் சந்தை முற்றுமுழுதாக செயல் இழக்கும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையால் நிரந்தர கட்டடங்களுக்கான முறையற்ற திட்டமிட்ட இடவாடகை அதிகரிப்பும் சேவைச்சந்தை வர்த்தகர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

சேவைச்சந்தையின் வர்த்தகர்களுக்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்துகிளிநொச்சிச் சேவை சந்தை வர்த்தகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# 862 வகை மருந்துகளுக்கு விலை சூத்திரம் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 12

எதிர்காலத்தில் 862 வகையான மருந்துகளுக்கு ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இந்த சூத்திரத்தைச் செயல்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இதன் மூலம், மக்கள் உணரும் வகையில் மருந்துகளின் விலைகளில் அரசாங்கத்தால் மாற்றங்களைச் செய்ய முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org